RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 326 நவம்பர்.26 2025 புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## திராவிடக் கட்சிகளின் பாணியில்... 'இலவச' பிரச்சாரத்துக்குத் தயாராகிறாரா விஜய்?



சென்னை, நவ.26-

"ரூபாய்க்கு மூன்று படி அரிசி லட்சியம்... ஒரு படி நிச்சயம்'' என்று 1967ல் அண்ணா சொன்னார். 1967 தேர்தலில் நடந்த மாற்றம் இந்தத் தேர்தலிலும் நடக்கப் போகிறது என்று சொல்லும் விஜய், "எல்லோருக்கும் நிரந்தரமான ஒரு வீடு... வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம், கார் என்பது லட்சியம்... அதற்கான வசதி வாய்ப்புகளை உருவாக்கும் அளவுக்கு பொருளாதார வளர்ச்சியை உண்டாக்கு வோம்'' என்று அண்ணாவின் பூமியில் நின்று முழங்கியிருக்கிறார்.

இதன் மூலம் விஜய்யும் தனது தேர்தல் அறிக்கையில் கவர்ச்சிகரமான 'இலவச' அறிவிப்புகளை வெளியிட தயாராவதை உணரமுடிகிறது. இலவசங்கள் என்பது 197176ல் கருணாநிதி முதல்வராக இருந்த காலத்திலேயே தொடங்கி விட்டது. பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு திட்டத்தை சத்துணவு திட்டமாக தரம் உயர்த்திய எம்ஜிஆர், நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கினார்.

விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, பெண்களின் திருமண உதவி திட்டத்தில் தாலிக்கு தங்கம் சேர்த்தது, பணிக்குச் செல்லும் பெண்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் தந்தது, அம்மா உணவகங்களை திறந்தது, ரேஷனில் திமுக அரசு கிலோ 1 ரூபாய்க்கு தந்த அரிசியை, 20 கிலோ இலவசம் என்றாக்கியது என ஜெயலலிதா ஆட்சியிலும் இலவசங்களுக்குப் பஞ்சமில்லை.

ஜெயலலிதாவுக்கு முன்பு கருணாநிதி ஆட்சியில் இலவசமாக வழங்கப்பட்ட 'கலைஞர் டிவி' மக்களின் வாழ்க்கை முறையையே மாற்றியது. இன்னும் பல இலவசங்களும் திமுக ஆட்சியில் திகட்டத் திகட்டத் தரப்பட்டன. இப்போது ஸ்டாலின் ஆட்சியிலும் பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை என இலவசங்கள் வரிசை கட்டுகின்றன.

திமுகவையும் அதிமுகவையும் விமர்சிக்கும் விஜய் அவர்கள் வழியிலேயே இலவசங்களை வழங்குவதற்கான பிரகடனத்தைச் செய்திருக்கிறார். தனது அரசியல் நாட்டத்தை தான் நடித்த படங்களில் ஆங்காங்கே விதைத்து வந்திருக்கும் விஜய், 'சர்கார்' படத்தில், இலவசங்களுக்கு எதிராக கொந்தளித்தார்.

மிக்சி, கிரைண்டர், டிவி உள்ளிட்ட அரசின் இலவசப் பொருட்களை மக்கள் ரோட்டில் போட்டு உடைப்பது போல் காட்சிகளையும் வைத்தார். இதைப் பார்த்துவிட்டு அவரது ரசிகர்கள் பலரும் இலவசப் பொருட்களை உண்மையாகவே ரோட்டில் போட்டு உடைத்து அதை வீடியோ எடுத்து வெளியிட்டதையும் பார்த்தோம்.

இப்படியான சூழலில் தான், காஞ்சிபுரத்தில் நடந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய விஜய், அனைவருக்கும் வீடு, வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம் என தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதை கோடிட்டுக் காட்டினார்.

பெண்களும் இளைஞர்களும் தங்களுக்கு ஆதரவாக திரள்கிறார்கள் என்றதும் அவர்களை ஈர்க்கும் விதமாகவே இந்த இலவசங்களைப் பற்றி விஜய் பேசி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

தேர்தல் அறிக்கையில் இன்னும் விரிவான விளக்கங்கள் இருக்கும் என விஜய் சொல்லி இருப்பதன் மூலம் மக்களைக் கவரும் இலவச அறிவிப்புகளுக்கு பஞ்சம் இருக்காது என்றே தெரிகிறது.

ஆக, என்னதான் வசனம் பேசினாலும் தமிழக மக்களை இலவசங்களால் மட்டுமே தன்வசப்படுத்த முடியும் என்பதை தாமதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார் விஜய். இது எந்த அளவுக்கு அவருக்குக் கைகொடுக்கிறது என்று பார்க்கலாம்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாதாந்திர சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் இ.கா.ப., அவர்கள், மாநகர் காவல் துணை ஆணையர்(வடக்கு) ஜி.எஸ்.அனிதா த.கா.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநகராட்சிக்கு தனியார் வங்கியின் (Kotak Mahindra Bank) பங்களிப்பின் கீழ் புதிதாக வழங்கப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனத்தை மாநகராட்சியின் துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். இந்நிகழ்வில் உதவி ஆணையாளர்(கணக்கு) திரு.வெங்கட்ரமணன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், முதன்மை மருத்துவ அலுவலர் மரு.ஸ்ரீ கோதை , சுகாதார அலுவலர் திரு.ராஜ் கண்ணன் மற்றும் தனியார் நிறுவன வங்கி மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளில் இன்று அரசமைப்புச் சட்ட முகப்புரையை வாசிக்க முதல்வர் உத்தரவு

சென்னை: நவ.26-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76 ஆம் ஆண்டினையொட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்து செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.




தமிழ்நாடு அரசு, இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் போற்றிப் பாதுகாத்து, சமூக நீதி, சமநிலை மற்றும் மக்கள் நலனிற்காக அயராது பாடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும், ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, சகோதரத்துவம் மற்றும் பொதுநலத்தை உறுதிப்படுத்துவதும், தமிழ்நாடு அரசின் தலையாய நோக்கம் ஆகும்.

கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்குட்பட்டு, மாநில சுயாட்சியே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி மாநிலத்தின் வளர்ச்சி நோக்கி தொடர்ந்து செயல்படும் அரசாக இயங்கி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு வழிவகைகளை உருவாக்க மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பின் 15(3)வது பிரிவின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்தமையால், தனது செயல்பாடுகளில், விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் அவற்றை செயல்படுத்தி, அரசியலமைப்பின்படி மகளிர் மற்றும் சிறார்களின் அடிப்படை உரிமைகளை மேலோங்க செய்வதில் இவ்வரசு பெருமை கொள்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 76வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வரும் 26.11.2025 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள்/ கருத்தரங்குகள்/ வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெல்டா மாவட்டங்களில் விடிய விடிய கொட்டித் தீர்த்த கனமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு பயிர்கள் சேதம்

தஞ்சாவூர்/ திருவாரூர்/ நாகப்பட்டினம்/ மயிலாடுதுறை/ காரைக்கால், நவ.26-

தென்மேற்கு வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்த நிலையில், டெல்டா மாவட்டங்களில் நேற்று கனமழை கொட்டித் தீர்த்தது.



தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக அவ்வப் போது பெய்து வந்த மழை நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று காலை வரை இடைவிடாமல் பெய்தது.

இதனால், மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளித்து ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் உத்தரவிட்டார். இந்த மழையால் மாவட்டம் முழுவதும் 2 ஆயிரம் ஏக்கர் சம்பா, தாளடி நெற்பயிர்களை மழைநீர் சூழ்ந்துள்ளது. குறிப்பாக அம்மாப்பேட்டை பகுதியில் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன.

மாவட்டத்தில் 2 வீடுகள் இடிந்துள்ளன. 2 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. அதிகபட்சமாக மதுக்கூரில் 136 மி.மீ. மற்றும் வெட்டிக்காடு 135, ஒரத்த நாடு 123, அய்யம்பேட்டை 111, பட்டுக்கோட்டை 103, நெய்வாசல் 97, தஞ்சாவூர் 95, குருங்குளம் 88, ஈச்சன் விடுதி 79, திருவிடைமருதூர் 75, திருவையாறு 72, அணைக்கரை 71, பூதலூர் 64, வல்லம் 63, கும்பகோணம் 63, அதிராம்பட்டினம் 61, பேராவூரணி 60, மஞ்சளாறு 58, திருக்காட்டுப்பள்ளி 49, கல்லணை 40 மி.மீ. என மழை பதிவாகியுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை தொடங்கி விடிய விடிய மழை கொட்டித் தீர்த்தது. இந்த மழையால், மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தை மழைநீர் சூழ்ந்தது. மேலும், மாவட்டம் முழுவதும் 10,000 ஏக்கரில் சம்பா, தாளடி பயிர்களை மழைநீர் மூழ்கடித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் நேற்று காலை வரை அதிகபட்சமாக திருத்துறைப் பூண்டியில் 110 மி.மீ. மற்றும் நீடாமங்கலம் 102.40, மன்னார்குடி 90, நன்னிலம் 84 மி.மீ. என மழை பதிவாகியுள்ளது.

நாகை மாவட்டத்தில் தொடரும் கனமழையால் தாழ்வான குடியிருப்பு பகுதிகளிலும், விவசாய நிலங்களிலும் மழைநீர் சூழ்ந்தது.

நாகையில் புதிய பேருந்து நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், பால்பண்ணைச்சேரி, என்ஜிஒ காலனி உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. பல பகுதிகளில் மரக்கிளைகள் முறிந்து சாலையில் விழுந்தன. கனமழையால் பள்ளிகளுக்கு மட்டும் நேற்று விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

மாவட்டத்தில் 1.62 லட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், பெரும்பாலான பயிர்கள் கடந்த 3 நாட்களாக நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் நேற்று காலை 6 மணி வரை அதிகபட்சமாக தலைஞாயிறில் 99.40 மி.மீ. மற்றும் திருக்குவளை 96.20, வேளாங்கண்ணி 83.40, நாகை 83.20, திருப்பூண்டி 76.30, வேதாரண்யம் 65.20, கோடியக்கரை 60.40 மி.மீ. என மழை பதிவாகியிருந்தது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக விட்டுவிட்டு கனமழை பெய்ததால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. மக்களின் இயல்பு வாழ்க்கைபாதிக்கப்பட்டது.

கடல் சீற்றம், பலத்த காற்று காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. 400 விசைப்படகுகள், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைபர் படகுகள் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் கரைப் பகுதிகளில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் 1.68 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா, தாளடி சாகுபடி செய்துள்ள நிலையில், 19,000 ஏக்கர் நெற்பயிர்களை தண்ணீர் சூழ்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் நேற்று மதியம் 2.30 மணி வரை அதிகபட்சமாக கொள்ளிடத்தில் 104.80 மற்றும் சீர்காழி 104, மணல்மேடு 63.80, செம்பனார் கோவில் 59.60, மயிலாடுதுறை 54.20, கொள்ளிடம் 104.80, தரங்கம்பாடி 17.30 மி.மீ. என மழை பதிவாகியிருந்தது.

காரைக்கால் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாததால், மீன்பிடி துறைமுக பகுதியிலும், கடற்கரையோரங்களிலும் படகுகள் பாதுகாப்பாக நிறுத்திவைக் கப்பட்டுள்ளன.

காரைக்கால் கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் கடலில் குளிக்க தடை விதித்து, போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். காரைக்காலில் நேற்று காலை 6.30 மணி வரை 64.7 மி.மீ மழையளவு பதிவாகியுள்ளது.

## டெல்லியில் 50% ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்ற உத்தரவு

புதுடெல்லி, நவ.26-

காற்று தரக் குறியீடு (ஏ.கியூ.ஐ.) 6 வகைகளாக தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. 050 புள்ளிகளுக்கு இடையே இருந்தால் பாதுகாப்பானது. 51100 புள்ளிகள் இருந்தால் மிதமானது.

101 முதல் 150 புள்ளிகள் இருந்தால் நோயாளிகளின் உடல்நலத்துக்கு தீங்கானது. 151 முதல் 200 புள்ளிகள் வரை இருந்தால் ஆரோக்கியமான மக்களின் உடல் நலனுக்கும் தீங்கு விளைவிக்கும். 201 முதல் 300 வரை இருந்தால் மக்களின் உடல்நலனுக்கு அதிக தீங்கினை விளைவிக்கும். 301 முதல் 500 வரை இருந்தால் மிகவும் அபாயகரமானதாகும்.

டெல்லியில் நேற்று நிலவரப்படி காற்று மாசு அளவு 450 புள்ளிகளாக இருந்தது. கடந்த சில வாரங்களாக இதே நிலை நீடிக்கிறது. இந்த சூழலில் டெல்லியில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 50% ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற டெல்லி அரசு நேற்று உத்தரவிட்டது. பள்ளிகள், கல்லூரிகளில் திறந்தவெளி மைதானத்தில் மாணவ, மாணவியர் விளையாட ஏற்கெனவே தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.



# தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் ஆய்வு கூட்டம்

தென்காசி, நவ.26-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் தனியார் பேருந்துகளை பாதுகாப்பான முறையில் இயக்கிடுவது தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

ஆய்வுக்கூட்டத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் பேருந்தினை மெதுவாகவும் பாதுகாப்பாகவும் இயக்கிடவும், வாகனத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் வாகனம் இயக்கப்பட வேண்டும், போக்குவரத்து வட்டார அலுவலர்கள் தனியார் பேருந்து வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள வேக கட்டுப்பாடு கருவி சரிவர இயங்குகிறதா? என்பதை ஆய்வு செய்து உறுதிப்படுத்திட வேண்டும். மேலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர், காவல்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கி வேகக்கட்டுப்பாட்டு நிர்ணயம் செய்வதற்கு குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அதிவேகமாக இயக்கப்படும் பேருந்துகள் கண்டறியப்படும் நேர்வில், சம்பந்தப்பட்ட பேருந்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து தென்காசி, துரைசாமிபுரம் அருகில் 24.11.2025 அன்று நடந்த பேருந்து விபத்து போன்று இனி வருங்காலங்களில் விபத்துக்கள் நடைபெறாத வகையில் தனியார் பேருந்துகளை இயக்கிட வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் அறிவுறுத் தினார்கள்.

இவ்வாய்வில், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திருமதி. செல்வி (சங்கரன்கோவில்) திரு. சரவணபவன் (தென்காசி), மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.



# தங்கள் பணியினை 100 சதவீதம் வெற்றிகரமாக முடித்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா வாழ்த்தினார்

கன்னியாகுமரி, நவ.26-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முட்டம் மற்றும் சைமன்நகர் ஊராட்சி அலுவலகம் மற்றும் ரீத்தாபுரம் பேரூராட்சி அலுவலகம் உள்ளிட்டவைகளில் கணக்கீட்டு படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு தீவிர திருத்தம் 2026 ஆனது 01.01.2026ஐ தகுதி நாளாக கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 15,92,872 வாக்காளர்கள் உள்ளார்கள். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுதோறும் சென்று கணக்கீட்டு படிவம் விநியோகம் செய்யும் பணி 04.11.2025 முதல் வீடு வீடாக சென்று 15,43,208 கணக்கீட்டு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாளது தேதி வரை 96.88 சதவீதம் கணக்கீட்டு படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று (25.11.2025) வரை 11,22,667 கணக்கீட்டு படிவங்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை திரும்ப கிடைக்க பெறாத கணக்கீட்டு படிவங்களை திரும்ப பெறுவதற்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு மட்டும் அந்தந்த வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில், திங்கள் முதல் புதன்கிழமை (26.11.2025) வரை சிறப்பு முகாம் நடைபெறுகிறது. வாக்காளர்கள் தாங்கள் பூர்த்தி செய்த தங்களது கணக்கீட்டு படிவங்களை நடைபெறும் முகாம்களுக்கு சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கன்னியாகுமரி, குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு மற்றும் கிள்ளியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர்கள் வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்களுக்கு இன்னும் ஒரிரு நாட்களுக்குள் சென்று தங்களது வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் தங்களது பூர்த்தி செய்த கணக்கீட்டு படிவங்களை வழங்கி, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதன் மூலம் உங்களது பெயர் வரும் 2026 வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும். தொடர்ந்து இன்று குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முட்டம் ஊராட்சி அலுவலகம் மற்றும் ரீத்தாபுரம் பேரூராட்சி, சைமன் நகர் ஊராட்சி அலுவலகம் உள்ளிட்டவைகளில் கணக்கீட்டு படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதியில் பணியாற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாகம் 91க்கு நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் திரு.சங்கர் கணேஷ் என்பவரும், பாகம் 17க்கு நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் திருமதி.நிஷா உட்பட 15 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தங்கள் பணியினை 100 சதவீதம் வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேதநகர் நூலகம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகங்களில் கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

நடைபெற்ற ஆய்வில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள், துறை அலுவலர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# பெருங்களத்தூரில், ஜி.எஸ்.டி. சாலையை ஒட்டி இரணியம்மன் கோவில் நிரந்தர நிலம் வழங்கக்கோரியும், கேட்வே நிர்வாகம் - ஸ்ரீராம் பிராபர்டிஸ் மற்றும் வருவாய் துறையை கண்டித்தும், பொதுமக்கள் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்பாட்டம்



பெருங்களத்தூர் நவ.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தை அடுத்த பெருங்களத்தூரில், ஜி.எஸ்.டி., சாலையை ஒட்டி, இரணியம்மன் கோவில் உள்ளது. பழமையான இக்கோவில், சுற்றியுள்ள பகுதி மக்களின் குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் உள்ளது.

நாள்தோறும், ஏராளமான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து செல்கின்றனர். ஜி.எஸ்.டி., சாலையை ஒட்டி இக்கோவில் உள்ளதால், குறிப்பிட்ட சில மீட்டர் தூரம், ஜி.எஸ்.டி., சாலை விரிவாக்கம் செய்யப்படாமல் உள்ளது. இதனால், அங்கு நாள்தோறும் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

சாலை விரிவாக்கம் செய்ய வசதியாக, இரணியம்மன் கோவிலை பின்புறம் தள்ளிவைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான அங்குள்ள தனியார் நிறுவனத்திடம் 21 செண்ட் நிலம் பெற்றுதர வேண்டும் என, கிராம மக்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால், பின்புறம் உள்ள தனியார் நிறுவனம், 10.4 சென்ட் நிலத்தை தானமாக தர ஒப்புக் கொண்டது. இதனால், நிலம் பெறும் விஷயம் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், இரணியம்மன் கோவிலுக்கு ஜி.எஸ்.டி., சாலையை ஒட்டி, நிரந்தர நிலம் வழங்கக்கோரியும், கேட்வே நிர்வாகம்ஸ்ரீ ஸ்ரீராம் பிராபர்டிஸ் மற்றும் வருவாய் துறையை கண்டித்தும், பொதுமக்கள் சார்பில், நேற்று, கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடத்தப்பட்டது.

இரணியம்மன் கோவில் அருகே, 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட ஆர்பாட் டத்தில், கிராம தேவதையான இரணியம்மன் கோவிலுக்கு, 21 சென்ட் நிலம் பெற்றுதர வேண்டும். கோவிலுக்கு பின்புறம் இருந்த அரசு புறம்போக்கு நிலம் 38 ஏக்கரை, 2004க்கு பிறகு தனியார் நிறுவனத்திற்கு, வருவாய் துறை பட்டா வழங்கியுள்ளது. அந்த நிலத்தை மீட்டு தர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

# போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான வாராந்திர ஆய்வுக் கூட்டம்

சிவகங்கை, நவ.26-

சிவகங்கை மாவட்டம், போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான வாராந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், போதைப்பொருள் புழக்கத்தினை கண்காணித்து முற்றிலுமாக ஒழித்திட காவல்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீவிர நடவடிக்கைகள் குறித்தும், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் உட்கொள்வதினால் ஏற்படும் தீமைகள் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகள் வைப்பது குறித்தும், போதைப்பொருள் நடமாட்டம் தொடர்பாக பொதுமக்கள் புகார்களை பதிவு செய்வதற்கான TN Drug Free APP-செயலி குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், மாவட்டம் முழுவதும் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொள்ளவும், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் போதைப்பொருள் தடுப்பு குறித்த பதாகைகளை வைத்திடவும் சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.



# தேவகோட்டை அருகே சாலை வசதி செய்து தர வில்லை என்றால் போராட்டம் நடத்த போவதாக கிராம மக்களை அறிவிப்பு

தேவகோட்டை, நவ.26-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே களத்தூர் கிராமத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தங்கள் கிராமத்திற்கு செல்ல சாலை வசதி கேட்டு கிராம மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தனர். ஆனால் நடவடிக்கை இல்லாததால் மதுரை தொண்டி சாலையில் நாளை மறுநாள் சாலை மறியல் போராட்டம் நடத்த போவதாக தெரிவித்தால் தேவகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் தாசில்தார் இச்சம்பவம் குறித்து அதிகாரிகள் மற்றும் கிராம மக்களுக்கு சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர். ஆனால் அதிகாரிகள் வராததால் அதிர்ப்பி அடைந்தனர். தேர்தல்களில் ஓட்டு போட மட்டும் தானா அவசர காலத்தில் ஆம்புலன்ஸ் கூட எங்க ஊருக்கு வராது கடந்த இரண்டு ஆண்டுகளாக பலமுறை மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, நாளை மறு நாள் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்கள்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நான் கூட்டத்தில் தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவோர்திட்டத்தின்கீழ் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்தில் பயணியர் ஆட்டோ வாங்கி தொழில் செய்வதற்கு கடனுதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவன் திரு.செ.சரவணன்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார். அருகில் மாவட்ட மேலாளர் (தாட்கோ) திரு.அ.செல்வகுமார் உள்ளார்.



■ கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு. மீ.தங்கவேல், கரூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026ஐ முன்னிட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தினை கரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தானிஷ்க்ன் ‘கோல்ட் எக்ஸ்சேஞ்ச் முன்முயற்சி’ நவம்பர் 30, வரை நீட்டிக்கப்பட்டுள்ளது




திருச்சி, நவ.26-

டாடா குழுமத்தின் ஒரு அங்கமான தனிஷ்க், இந்தியாவில் அதிக நம்பிக்கைக்குரிய ஆபரண பிராண்டாக திகழும் நிலையில் இந்நாட்டில் பழைய தங்க நகைகளை புதிய நகைகளாக மாற்றும் இந்நாட்டின் மிகப்பெரிய இயக்கத்தை தொடங்கி தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இந்தியாவின் உண்மையான தங்க இருப்புகள், தங்கச் சுரங்கங்களில் இல்லை. மாறாக, நாடெங்கிலும் உள்ள இந்திய மக்களின் வீடுகளில் தான் அவைகள் இருக்கின்றன. இந்திய இல்லங்களில் மட்டும் 25,000 டன்கள் தங்கம் இருப்பதாக மதிப்பிடு உள்ளநிலையில் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் தேவையில் ஏறக்குறைய 99% என்ற அளவிற்கு தங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த முரண்பாடுக்கு தீர்வு காணும் விதத்தில் தங்களிடம் ஏற்கனவே இருக்கின்ற தங்க ஆபரணங்களின் மதிப்பை வெளிக்கொணருமாறு குடும்பங்களை தனிஷ்க் ஊக்குவிக்கிறது; பழைய தங்க நகைகளை புதிய, நவீன வடிவமைப்புகளாக மாற்றிக் கொள்வதன் மூலம் நம் நாடு தங்க இறக்குமதிக்காக பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை குறைக்கிறது.

பிரபல ஆளுமையான கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் உடன் தனிஷ்க் இணைந்திருக்கிறது. 2025 நவம்பர் 30ம் தேதி வரை அனைத்து கேரடேஜ் களிலும் (9 KT என்ற குறைந்த அளவு வரை) பழைய தங்க நகைகளை மாற்றும்போது பூஜ்ய (0%*) பிடித்தம் என்ற சிறப்பு சலுகையை நுகர்வோர்களுக்காக தனிஷ்க் முதன் முறையாக வழங்குகிறது. தேச நலன் மீது அக்கறையுடன் சுயசார்பை ஆதரிக்கும் இந்த சிறப்பான முயற்சியில் ஒவ்வொரு இந்தியரும் பங்கேற்பதை இத்திட்டத்தின் மூலம் தனிஷ்க் எளிதாக்கியிருக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக, தனிஷ்க்-ன் தங்க பரிமாற்ற திட்டத்தில் 30 இலட்சத்திற்கும் அதிகமான இந்தியர்கள் பங்கேற்று ஏறக்குறைய 1.7 இலட்சம் கிலோ தங்கத்தை மறுசுழற்சி செய்திருக்கின்றனர். தனிஷ்க் பிராண்டின் மொத்த பிசினஸில் 40% இந்த சக்தி வாய்ந்த பரிமாற்ற இயக்கத்தின் மூலம் இப்போது முன்னெடுக்கப்படுகிறது.

டைடன் கம்பெனி லிமிடெட் ன் ஆபரண பிரிவின் தலைமை செயலாக்க அதிகாரி திரு.அஜாய் சாவ்லா கூறியதாவது: “ஒரு குடும்பமானது, பூட்டப்பட்டு வைத்திருந்த ஒரு கிராம் தங்கத்தை மாற்றுகின்ற ஒவ்வொரு முறையும் தங்களுக்காக அதிகரித்த மதிப்பை பெறுகின்றனர். அதுமட்டுமல்லாமல், தங்க இறக்குமதியின் அளவைக் குறைப்பதன் வழியாக தேசத்தின் நலனிற்கும், சுயசார்பிற்கும் பங்களிப்பை வழங்குகின்றனர். பழைய தங்க நகைகளை மாற்றுவதன் ஆற்றல் அபரிமிதமானது; தனிப்பட்ட மகிழ்ச்சியோடு, தேச நலனிற்கு ஆதரவளிக்கும் தாக்கமும் ஒன்றாக இதில் இணைந்திருக்கிறது. பல்வேறு வகை கேரட்டேஜ் களிலும் (9 KT போன்ற மிக குறைவானதிலும் கூட) இந்த பண்டிகை காலத்திற்காக முதன்முறையாக நாங்கள் வழங்கும் 0% பிடித்தம் என்ற சலுகைத் திட்டத்தின் மூலம் நமது நாட்டை சுயசார்புள்ளதாக மாற்றும் மகத்தான இலட்சிய திட்டத்தில் ஒவ்வொரு இந்தியரும் பங்கேற்பதை நாங்கள் மிக எளிதானதாக ஆக்குகிறோம்.”

## சிவகங்கை மாவட்டம் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் திட்டத்தின் கீழ்

# 100 சதவீதம் மானியத்தில் காய்கறி விதைத்தொகுப்பு பெற்று, ஊட்டச்சத்து தன்னிறைவு பெற்ற பயனாளி தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனம் நெகிழ நன்றியினை தெரிவித்தார்








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் வேளாண்மைத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறார்கள்.

விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆகியத்துறைகளின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, விவசாயிகளை பயன்பெறச் செய்வது மட்டுமல்லாமல், நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களையும் அறிவித்து, நலன் பெற செய்து வருகிறார்கள்.

அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 4.7.2025 அன்று வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில், "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற புதிய திட்டத்தினை காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். இத்திட்டமானது, தமிழகம் முழுவதும் செயல்படுத்துகின்ற வகையில், அன்றையதினமே அனைத்து மாவட்டங்களிலும் திட்ட துவக்க விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

"ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டமானது, 2025-2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. மக்கள் நலம் மற்றும் நல்வாழ்வு என்பது அவர்கள் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகிறது. ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், சிறு தானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. மேலும், ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டமானது தமிழகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். அதற்கு, தினசரி சராசரியாக 400 கிராம் அளவு காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொள்ள வேண்டும். மேலும், ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், சிறுதானியங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதனை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைத்திடவும், அன்றாட காய்கறி தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் 100 சதவீத மானியத்தில் காய்கறி விதை தொகுப்புகள் மற்றும் பழச்செடி தொகுப்புகள் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாகவும் அமைந்துள்ளது. அதற்கென தோட்டக்கலைத்துறையின் சார்பாக ரூபாய் 60/ மதிப்பீட்டில் தக்காளி – 2 கிராம், கத்தரி, வெண்டை – 3 கிராம், மிளகாய் – 3 கிராம், கொத்தவரை 3 கிராம், கீரை – 5 கிராம் போன்ற 6 வகை காய்கறி விதைகள் அடங்கிய காய்கறி விதை தொகுப்பு, ரூபாய் 100/ மதிப்பீட்டில் விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழச்செடிகள் அடங்கிய பழச்செடி தொகுப்புகள் மற்றும் வேளாண்மைதுறையின் சார்பாக ரூ.67/ மதிப்பீட்டில் புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி/தட்டைபயறு 510 கிராம், அவரை 10 கிராம் உள்ளிட்ட 3 பயறு வகைகள் அடங்கிய பயறு வகை விதைத் தொகுப்புகள் பொதுமக்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

"ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டமானது மாவட்டத்திலுள்ள 12 வட்டாரங்களிலும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, 6 வகை காய்கறி விதைகள் அடங்கிய 46,000 தொகுப்புகளும், 3 வகையான பழச்செடிகள் அடங்கிய 28,200 தொகுப்புகளும், 3 வகையான பயறுவகை அடங்கிய 2,000 தொகுப்புகளும் 100 சதவீத மானியத்தில் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் தொடக்கமாக, கடந்த 4.7.2025 அன்று தலா 50 விவசாயிகள் வீதம் காய்கறி விதை தொகுப்புகள், பழத்தொகுப்புகள் மற்றும் பயறு வகை தொகுப்புகள் பொதுமக்களுக்கு



வழங்கி தொடங்கி வைக்கப்பட்டது.

ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் காய்கறி விதைத்தொகுப்பு பெற்று, பயன்பெற்று வரும் பயனாளி பெருமாள் அவர்கள் தெரிவிக்கையில்,

என் பெயர் பெருமாள். நான் கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட மானகிரி சுக்கானேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எனது குடும்பத்தின் அன்றாட தேவைக்கான காய்கறிகளை, வீட்டு தோட்டத்திலேயே இயற்கையான முறையில் உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்து வந்தேன்.

அச்சமயம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும் காய்கறி விதை, பழச்செடி மற்றும் பயறு வகை தொகுப்புகள் குறித்து அறிந்து, எனது வட்டாரத்தின் தோட்டக்கலைதுறை அலுவலகத்தை அணுகினேன். தோட்டக்கலைத்துறையினர் "ஊட்டசத்து வேளாண்மை இயக்கம்" திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகுப்புகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

அதனைத்தொடர்ந்து, நான் காய்கறி தொகுப்பு வேண்டி விண்ணப்பித்தேன்.

அதன்படி, தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, கொத்தவரை மற்றும் கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு எனக்கு வழங்கப்பட்டது. மேலும், காய்கறி விதைகளை எவ்வாறு பார் பிடித்து பாத்தி அமைத்து சரியான இடைவெளியில் விதைத்தல், கீரை விதைகளை மேட்டுப்பாத்தி அமைத்து விதைகளை தூவி விடுதல் அல்லது வரிசை விதைப்பு செய்தல் ஆகியன குறித்தும், காய்கறிகளை எந்தவித நோய் மற்றும் பூச்சித்தாக்குதலும் இன்றி சிறப்பான முறையில் பராமரித்து பயன் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் தொழில்நுட்ப ரீதியில் துறை சார்ந்த அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

அந்த நெறிமுறைகளை முறையாக பின்பற்றி எனது வீட்டு தோட்டத்தில் 6 வகையான காய்கறி விதைகளையும் விதைத்தேன். உரிய காலத்திலேயே அனைத்து செடிகளும் அதன் பயனை தந்துள்ளது. இதன் வாயிலாக எனது குடும்பத்தின் தினசரி காய்கறி தேவைகளை பூர்த்தி செய்யப்பட்டு, காய்கறிகளுக்கென செலவிடப்படும் தொகையும் குறைந்துள்ளது. மேலும், இவ்வாறாக வீட்டு தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதன் மூலம் ரசாயனமற்ற ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதையும் நான் உறுதி செய்து கொண்டேன்.

அனைவரின் நலனிலும் அக்கறைக் கொண்டு,"ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" போன்ற திட்டங்களை தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படுத்தி, ஒவ்வொரு நபரையும் ஊட்டச்சத்து தன்னிறைவு அடையச்செய்தவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னைப் போன்று, காய்கறி விதைத்தொகுப்பு பெற்று பயன்பெற்று வரும் பயனாளிகளின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மனம் நெகிழ திரு.பெருமாள் அவர்கள் தெரிவித்தார்.

**தொகுப்பு: மு.ராஜசெல்வன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.**



■ வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் செயலியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / காட்பாடி வட்டாட்சியருமான ஜெகதீஸ்வரன் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா துணை மேயர் மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத் தொடரில் மாநகராட்சி பகுதியில் நடந்து வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து மாமன்ற கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட சுகாதார இணை இயக்குநர் அரவிந்த் ஜோதி மாநகராட்சி பொறியாளர் சரவணன்,உதவி செயற்பொறியாளர் ரகுராமன் மண்டல தலைவர்கள் ஜவகர், அகஸ்டினா கோகிலவாணி, முத்துராமன், செல்வகுமார் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# பழனியில் உள்ள யமஹா ஷோரூம்-ல் புதிய யமஹா மாடல் பைக் அறிமுக விழா

திண்டுக்கல், நவ.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் யமஹா ஷோரூம் இல் புதிய யமஹா பைக், எக்ஸ் எஸ் ஆர் 155 அறிமுக விழா நடைபெற்றது.

இதில் நான்கு வகையான வண்ணம் கொண்ட புதிய பைக்குகள் அறிமுகப்படுத்தப் பட்டது.

முன்னதாக இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பழனி ஆர் டி ஓ ஸ்ரீதர் , வணிகர் சங்க பேரமைப்பின் பொறுப்பாளர்கள் ஜே பி சரவணன், கன்னிச்சாமி , மற்றும் பலரும் கலந்து கொண்டனர். இவர்களை பழனி யமஹா சோறும் உரிமையாளர் வினோத் வரவேற்றார்.

இந்த அறிமுக விழாவில் பேசிய ஆர் டி ஓ, புது பைக்குகள் வாங்குபவர்கள் 18 வயதிற்கும் மேல் உள்ளவ ர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் டுவீலர் லைசன்ஸ் வாங்கியவர்களாக இருக்க வேண்டும் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் yamaha பைக்கள் பிடிக்கும், மேலும் யமஹா வகை பைக்குகளை வாங்க இளைஞர்கள் ஆசைப்படுகிறார்கள் என வணிகர் சங்க மாவட்ட தலைவர் ஜே பி சரவணன் தெரிவித்தார். முன்னதாக புதிய வகை பைக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வாடிக்கையாளர்கள் புதிய இருசக்கர வாகனங்களை மகிழ்ச்சியுடன் ஓட்டிச் சென்றனர்...

# மண்பாண்ட பயன்பாடுகள் தொடர்பாக பாடத் திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர்



சிவகங்கை, நவ.26-

சிவகங்கை மாவட்டம் மண்பாண்ட பயன்பாடுகள் தொடர்பாக பாடத் திட்டங்களில் பாடமாக வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில்மனு கொடுத்தார்கள். மாவட்ட தலைவர் அளித்துள்ள அவர்கள் மனுவில் கொடுத்துள்ள விவரங்கள் வருமாறு

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் குடும்ப அட்டை தாரர்களுக்கு பச்சை அரிசி, கரும்பு. சர்க்கரை, முந்திரி, ஏலக்காய், உள்ளிட்ட உணவுப்பொருட்களை ஆண்டுதோறும் தமிழக அரசு விலையில்லாமல் வழங்கி வருகிறது. புத்தாண்டில் விளைகின்ற புது அரிசியை அறுவடை செய்து புதுப்பானையில் பொங்கலிட களிமண்ணால் ஆன ஒரு புதுப்பானையும், ஒரு புது அடுப்பும் அரசு கொள்முதல் செய்து விலையில்லாமல் தர வேண்டும் என்று தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். வர இருக்கின்ற பொங்கல் திருநாள் முதல் வழங்கி மண்பாண்டத் தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் பருவமழை பெய்கின்ற அந்த காலங்களில் மண்பாண்டத் தொழிலாளர்கள் மண்பாண்டத் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு மழைக்கால நிவாரண உதவித் தொகையாக மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தமிழக அரசு ரூ. 5000/ (ரூபாய் ஐயாயிரம்) வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகையை மீன்பிடிக்காலங்களில் மீனவர்களுக்கு ரூபாய் 7.000/ரூபாய் ஏழாயிரம் உயர்த்தி கொடுப்பதுபோல் மண்பாண்டத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்திட்ட அத்துணை தொழிலாளர்கள் குடும்பங்களுக்கும் ரூ.10,000/ (ரூபாய் பத்தாயிரம்) வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் இதுநாள் வரை பதிவு செய்திட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் மின்சாரத்தால் இயங்கக்கூடிய (சீலாவில்) மின்சக்கரம் இலவசமாக வழங்கிட மாநில மற்றும் மத்திய அரசுகளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

மண்பாண்டத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் பல்லாண்டு காலமாக வசித்து வருகின்ற வீட்டிற்கும், அவர்கள் தொழில் செய்யும் இடத்திற்கும் அடிமனை பட்டா வழங்கிட வேண்டநபழவ் மிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம். மண்பாண்டங்களில் உணவை சமைத்து சாப்பிடும் நலன்களை எதிர்கால சந்ததியினர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழக அரசு பாடபுத்தகத்தில் ஒரு பாடப்பிரிவினை ஏற்படுத்திட வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

.மத்திய, மாநில அரசுகள் சார்பாக ஏழை எளிய தொழிலாள மக்களின் நல்வாழ்வுக்காக பசுமை வீடுகள் கட்டி தருகின்ற திட்டத்தில் மூலம் கட்டப்பட்டு,த் வருகின்ற வீடுகளில் மண்பாண்டத் தொழிலாளர்கள் குடும்பத்தினர்களுக்கும் ஒரு சில வீடுகள் ஒதுக்கி தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று மாவட்டத் தலைவர் ராதா.மாநில துணை தலைவர் பொறியாளர் ஆண்டவர்.மனு கொடுத்து வலியுறுத்தினார். உடன் மகளிர் அணி அமைப்பாளர் நதியா இளைஞர் அணி அமைப்பாளர் பாரதி அச்சக தேவதாஸ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்..




# வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் பள்ளி கல்வித்துறை சார்பில் அறிவியல் கல்வி சுற்றுலா செல்லும் மாணவர்களை, ஆட்சியர் கொடியசைத்து அனுப்பி வைப்பு

வேலூர், நவ.26-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை சார்பில் அறிவியல் கல்வி சுற்றுலா செல்லும் பள்ளி மாணவர்களை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவி திட்ட அலுவலர் ஜோதீஸ்வரப்பிள்ளை, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# வேலூர் அடுத்த காட்பாடியில் பிரீஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் சிறந்த பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் விழா

## புதுச்சேரி (பா.ஜ.க.) நெல்லித்தோப்பு எம்எல்ஏ ஜே. விவிலவன் ரிச்சார்ட் ஜான்குமார் பங்கேற்று விழாவில் சிறப்புரையாற்றி விருதுகளை வழங்கினார்

காட்பாடி, நவ.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர், சரங்காலயா திருமண மண்டபத்தில், ஸ்ரீ புரம் ஸ்ரீ நாராயணி குழுமம் ஸ்ரீ சக்தி அம்மா நல்லாசியுடன், ப்ரிஸ் கல்வி அறக்கட்டளை சார்பில், சிறந்த பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் விழா, பிரீஸ் கல்வி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் மற்றும் பிரீஸ் செவிலியர் கல்லூரியின் தாளாளர் டாக்டர். பா.மெடோனா பிரீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக புதுச்சேரி, (பாஜக எம்.எல்.ஏ) நெல்லித்தோப்பு சட்டமன்ற உறுப்பினரும் ஜே. விவிலன் ரிச்சார்ட் ஜான்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, வேலூர் மாவட்ட அரசு பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றி சாதனை புரிந்துள்ள பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சிறந்த ஆசிரியர் விருது வழங்கி சிறப்பித்தனர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக அதிமுக மாவட்ட மாநகர செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு மற்றும் வேலூர் ஷட்டர் போட்டோகிராபி நிறுவனர் சி.ராஜசேகர் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்து சாதனை படைத்துள்ள பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பிரீஸ் அறக்கட்டளை மற்றும் பிரீஸ் செவிலியர் கல்லூரி சார்பில் சிறப்பு அழைப்பாளரையும், சிறப்பு விருந்தினர்களையும் சிறப்பான முறையில் வரவேற்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் சிறப்பான முறையில் பணியாற்றி சாதனை படைத்துள்ள பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# ஏழை எளிய பிள்ளைகள் பயன் பெரும் விடுதிகள் வணிக கட்டிடங்கள் அல்ல குடியிருப்பதற்கான கட்டிடம் என நீதிமன்ற தீர்ப்பை தமிழக அரசு அமல்படுத்த வேண்டும்

## சங்கத்தின் தலைவர் எ சீதாராமன் அரசுக்கு வேண்டுகோள்

சென்னை, நவ.26-

ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகள் பணிபுரியும் மகளிர் மற்றும் ஆடவர் விடுதிகள் வணிகக் கட்டிடங்கள் அல்ல குடியிருப்பதற்கான கட்டிடங்கள் என்று நீதிமன்ற தீர்ப்பை தமிழக அரசு அமல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு ஐடி விடுதி உரிமையாளர்கள் நல சங்கத்தின் தலைவர் லயன் எ சீதாராமன் அவர்கள் தமிழக அரசுக்கு வேண்டுகோள் வைத்தார்.

கடந்த7/11/25 அன்று நீதியரசர் மேதகு கிருஷ்ணன் ராமசாமி அவர்கள் ஏழை எளிய வீட்டு பிள்ளைகள் தங்கி பணிபுரியும் மகளிர் மற்றும் ஆடவர் விடுதிகள் வணிக கட்டிடங்கள் அல்ல குடியிருப்பிற்கான கட்டிடங்களே என்று தீர்ப்பளித்துள்ளார் மேலும் அடிப்படை தேவைகளுக்காக விடுதிகளில் தங்கி உள்ள ஏழைப் பிள்ளைகள் பயன்படுத்தும் மின்சாரம் குடிநீர் போன்றவை வணிக கட்டணமாக இல்லாமல் குடியிருப்பு கட்டணமாக மாற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். மின்சாரம் கட்டணம் உயர்ந்தால் குடிநீர் கட்டணம் உயர்ந்தால் உடனடியாக அமல்படுத்தும் அரசு ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகள் சிரமப்படும் விடுதிகளுக்கான மின்சார கட்டணத்தை உடனடியாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வேதனையாக உள்ளது மேதகு நீதியரசர் அளித்த தீர்ப்பினை அமல்படுத்தக்கோரி தமிழ்நாடு ஐடி விடுதி உரிமையாளர்கள் நல சங்கத்தின் மாநிலத் தலைவர் லயன் எ சீதாராமன் அவர்கள் தலைமையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் துறை மேலாண்மை இயக்குனர் திருT. G. வினய் IAS அவர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரிய chairman, இயக்குனர் அவர்களுக்கும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் கடிதங்கள் வழங்கப்பட்டன அதேபோல் இன்று பெரும்பாலான விடுதிகள் செயல்படும் மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள மின்சார வாரிய உயர் அதிகாரிகளிடம் அந்த அந்த பகுதியில் உள்ள விடுதி உரிமையாளர்கள் தலைவர்கள் தலைமையில் கடிதங்களை அளித்து நீதி அரசரின் ஆணையை அமல்படுத்தி தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய 25000 விடுதிகள் அதில் தங்கக்கூடிய 2000000 மேற்பட்ட பணிபுரியும் மகளிர் மற்றும் ஆடவர் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒரு கோடி பேரின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றுமாறு தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

# பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். இடம் இருந்த நாட்டை மீட்டெடுக்க காங்கிரசை கிராமங்கள் தோறும் வலுப்படுத்தி வருகிறோம் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் மதுகௌட் யாஷிக் வேலூரில் பேட்டி

வேலூர், நவ.26-

வேலூர்மாவட்டம், வேலூர் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நேற்று காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது மாவட்டத்தலைவர் டீக்காராமன் தலைமையில் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு தலைவர் வாஹீத் பாஷா,மற்றும் சித்தரஞ்சன், ரகு, உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



இக்கூட்டத்தில் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மதுகௌட் யாஷிக் பங்கேற்று தொண்டர்களுக்கு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்.

செய்தியாளர்களிடம் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் மதுகௌட் யாஷிக் கூறுகையில், கட்சி கட்டமைப்பு ஜனநாயக கட்டமைப்பு மாவட்ட அளவில் கட்டமைக்கும் பணியில் காங்கிரஸ் கட்சி தற்போது ஈடுபட்டுள்ளது.

கடந்த 2014 முதல் 10 ஆண்டுகளாக பாரதிய ஜனதாவுடன் காங்கிரஸ் போரிட்டு வருகிறது. அதில் ஸ்டாலினும் ராகுல் காந்தியுடன் இணைந்து மத்திய அரசின் மக்கள் பாகுபாடு அரசியலுக்கு எதிராக போராடி வருகிறார்கள்.

தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்குகிறது, காமராஜர் போன்ற தலைவர்களும் அண்ணாதுரை கருணாநிதி போன்ற தலைவர்களும் தந்த திராவிட இயக்கம் சமூக நீதியை அளித்து மக்களை காக்கிறது. ராகுல் காந்தி கருத்து பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார், அதனை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கேவும் செய்து வருகிறார்.

அந்த வகையில் காங்கிரஸ் கொள்கைகளை மக்களிடம் எடுத்து செல்லவும் ஆங்காங்கே புதிய தலைவர்களை தேர்ந்தெடுக்கவும் மாவட்ட அளவில் காங்கிரஸ் கமிட்டியையும் கிராமங்கள் தோறும் வார்டு வாரியாகவும் வலுப்படுத்தவுள்ளோம்.

காங்கிரஸ் உட்கட்சி தேர்தலை நடத்தவுள்ளோம் அதற்கு யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம் ஆனால் அவர்கள் 3 ஆண்டுகள் முதல் ஐந்தாண்டுகள் வரையில் கட்சியிலிருந்து வேண்டும்.

காங்கிரஸ் மாவட்டத் தலைவர் பதவிக்கான தேர்தலை வெளிப்படையாக நடத்தவுள்ளோம் வேலூர் வரலாற்று சிறப்புமிக்க இடம் பாஜக மற்றும் ஆர்.எஸ். எஸ். இடம் இருந்த நாட்டை மீட்டெடுக்க காங்கிரசை கிராமங்கள் தோறும் வலுப்படுத்தி வருகிறோம் என்று கூறினார்.

# விதை விற்பனை சட்டங்களை மீறினால் உரிமம் ரத்து

சிவகங்கை, நவ.26-

சிவகங்கை மாவட்டத்தில் விதை விற்பனை நிறுவனங்கள் (தனியார், அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள்) விவசாயிகளின் சாகுபடிக்குத் தேவையான விதைகளை ஆதார விதை, சான்றளிக்கப்பட்ட விதை மற்றும் உண்மைநிலை விதை என்ற நிலைகளில் விற்பனை செய்து வருகின்றனர். விதைச்சட்டம் மற்றும் விதிகளின்படி விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் பல்வேறு நிலைகளில் கவனம் செலுத்தி தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வேளாண்மை ஞ உழவர் நலத்துறை உயர் அலுவலர்கள் அறிவுரைகள் வழங்கி வருகின்றார்கள். இதன் அடிப்படையில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை விதை ஆய்வுப் பிரிவு விதை ஆய்வாளர்கள் மற்றும் விதை ஆய்வு துணை இயக்குநர் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

விதைச்சட்டம் மற்றும் விதிகளை மீறும் நிறுவனங்கள் மீது துறை நடவடிக்கை, நீதிமன்ற நடவடிக்கை ஆகியவகைகள் எடுக்கப்படுகின்றது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983ன்படி விதை விற்பனை உரிமத்தினை தற்காலிக நிறுத்திவைப்பு மற்றும் ரத்து செய்வது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாண்டு இதுவரை 6 தனியார் விற்பனை நிலையங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் 9 விதை விற்பனை நிலையங்களின் உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா தெரிவித்துள்ளார்.




■ மதுரை மாவட்டம் வில்லூரில் சாய் இண்டர்நேஷனல் சோசியல் சர்வீஸ் அறக்கட்டளை சார்பாக பெண்களுக்கான இலவச சுய தொழில் பயிற்சியாக ஆரி வொர்க், அழகுகலை, தையல் பயிற்சி வகுப்பு மற்றும் சுய தொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சி அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் வெங்கடேஷ்வரன் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் அறக்கட்டளையின் விருதுநகர் மாவட்ட பொறுப்பாளர் ஷாலினி சிறப்புரையாற்றினார்,மற்றும் நிர்வாகிகள் எப் டாக்ஸி அமர் பாண்டியன் நன்றியுரை நிகழ்த்தினார் சமூக ஆர்வலர் கிருஷ்ணா பிரபா நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்தார். இம்முகாமில் 20 க்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்..



■ வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பெற்ற வீனஸ் கிரிக்கெட் அணி, இரண்டாம் இடம் பெற்ற மெட்ரோ அணி ஆகியவைக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் சீனிவாச ராஜ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தலைமை செயல் அலுவலர் காசி விஸ்வநாதன், வேலூர் மாவட்ட சங்கத் தலைவர் மற்றும் நறுவீ மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் ஆகியோர் சுழற் கோப்பைகள் வழங்கினர். உடன் மாநில மற்றும் மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# பழனியில் கஞ்சா விற்பனை செய்த 15 இளைஞர்கள் கைது டிஎஸ்பி தனஜெயன் தலைமையில் நகர காவல் துறை

திண்டுக்கல், நவ.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஏ பி ஏ காலேஜ் தண்ணீர் தொட்டி அருகே மற்றும் ஏ பி ஏ காலேஜ் பஸ் ஸ்டாப் அருகே ஆகிய இரு பகுதிகளில் .காவல் ஆய்வாளர் மணிமாறன் சார்பாய்வாளர் விஜய் காவலர்கள் போலீசார் இன்று வழக்கமான ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த 15 நபர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். முன்னுக்குப் பின் முரணாக போலீசாரிடம் தகவல் தெரிவித்ததால் 15 பேரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். போலீசாரின் விசாரணையில். பெத்தநாயக்கன்பட்டியை சேர்ந்த மாரிமுத்து. பாலசமுத்திரத்தைச் சேர்ந்த பெரியசாமி. பழனியைச் சேர்ந்த ராமச்சந்திரன். ராஜா. கார்த்திகேயன். ராமச்சந்திரன். அஜித் குமார் அடிவாரம் பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன். கோதமங்கலத்தைச் சேர்ந்த சரவணன் அடிவாரம் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன். குரும்பபட்டியைச் சேர்ந்த பிரஜித். ராசாபுரத்தைச் சேர்ந்த.அமுதா நிலவன். ஆண்டவர். மற்றும் அடிவாரம் பகுதியைச் சேர்ந்த மணிவேல். பால சமுத்திரத்தைச் சேர்ந்த வடிவேல் உள்ளிட்ட 15பேரும் கஞ்சா விற்பனை செய்துவந்ததும், கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா விற்பனை செய்ய காத்திருந்ததும் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து 250 கிராம் கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்தது பறிமுதல் செய்யப்பட்டது அவர்களிடமிருந்து 5 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டனர் பின்பு வழக்கு பதிவு செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்



■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் நகரின் முக்கிய சாலை பகுதிகளில் தனியார் பேருந்துகள் வாடகை ஆட்டோக்கள் அதிவேகமாக இயக்கப்படுகிறது இதனால் பலர் காயமுற்றும் சிலர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழக்கின்றனர். வாகனங்கள் போட்டி போட்டுக் கொண்டு செல்ல இது ஒன்றும் பந்தய சாலை அல்ல ஆகையால் 2,3,4 சக்கர வாகன ஓட்டிகள் மிக கவனமாக வாகனங்களை இயக்க வேண்டும் என்று லயன்ஸ் சங்கம் ரோட்டரி சங்கம் மற்றும் தேவகோட்டை நகர் போக்குவரத்து காவல்துறையின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்திய போதிலும் வாகன ஓட்டிகள் சாலை போக்குவரத்து விதிமுறைகளை மதிக்காமல் செல்வதின் விளைவாக விபத்துகள் அதிக அளவில் ஏற்படுகிறது பொதுமக்களாகிய நாமளும் சாலை விதிமுறைகளை பின்பற்றினால் மட்டுமே அதிக அளவில் ஏற்படக்கூடிய விபத்துகளை தடுக்க முடியும் அவரவர் பொறுப்பு அறிந்து வாகனத்தை சீரான வேகத்தில் இயக்க வேண்டும் என்று இழக்கின்றனர்.லயன்ஸ் சங்கம் ரோட்டரி சங்கம் மற்றும் தேவகோட்டை நகர் போக்குவரத்து காவல்துறையின் சார்பில் அறிவுறுத்தப்படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161